VISIT…

(1)

உமா மஹேஸ்வரி

கவிதைகள்

அழகிய வடிவில் : ரிஸி-KSA

(2)

ஓயாத இன்மையின் வெளியில்
உதிர்கின்றன;
பூக்கின்றன நொடிகள்.
உயிர் நீர் பளபளக்கும்
பிள்ளை விழிகள்
நிறைக்கின்றன வெற்றறைகளை.
கலைந்த உன் சிகை
கூப்பிடுகிறது என் விரல்களை.
கருக்கால அரவணைப்பை
உணர முடியவில்லை,
அதி சுத்தமான படுக்கையில்.
யாரோ வரைந்த
ஓவியக் கடýல்
அலையாகிறேன்;
துளியாகிறேன்;
ஆழமுறுகிறேன்
வடிகிறேன்
உலர்ந்த கரையில்.

(3)

காமத்தின் அந்தர ஏணியில்
கால் வைக்கிறேன்
நடுநடுங்கி.
பாசி படர்ந்த குளப் படிகளில்
விரிகிறது
மோகத்தின் ஊதா நிறம்.
மணல் மேடுகள் குமுறித் திறக்க,
பனிப் புயலில்
அமிழ்கிறது சொல்லியவொரு காதல்.
நீவிய படுக்கை விரிப்பு
நீட்டி வரைந்து காட்டுகிறது
அவன் உடலின் வெளிக்கோடுகளை.
வரைமுறைகளற்ற வேட்டையின்
ஆவேசங்களில் கூர்ந்திருக்கும்
மலை உச்சி
நிலைப் பிளவை
முட்டிப் புகுந்து விட,
விந்துக் கறையெனத்
தரையில் வீழ்ந்து படர்கிறது
அந்தி மேகம்

இன்றைய அருவி
கொட்டுகிறது துயரமாக.
அதைக் குறித்த
கற்பனைகளோடிருந்தவள் சமைகிறாள்
கற்பாவையாகக் கரையில்.
நிராகரிப்பின் கிழிசல்களிடையே
தெரிகிறது
ப்ரியம் ஒரு
சிறிய தீக்குமிழாக.
நாற்றுப் பாடல்களில்
இழையோடும் நேசம்
இறக்கவில்லை.
ஆனால் அது அழுகுகிறது
தீண்டுவாரற்ற கனியாக

நனைந்த தோட்டத்தின் மீது
நடந்து கொண்டிருக்கிறது வெயில்.
உறவுகளின் அடிப் புள்ளிகளைத்
தொட்டுத் தொட்டு
இட்டபடி அலைகிறது
மனம் நிதந்தோறும்.
குழப்பத்தோடும், அச்சத்தோடும்
திரிந்த வானம்
மெல்லச் சாய்கையில்
நிசப்தம் வரைந்து பார்க்கிறது
உளைவுகளின் ஓவியத்தை.
தெருவோரம் கிடக்கும்
செத்த பூனையின்
ஒற்றை விழியைக் கொத்தி நடுகிறது
ஒரு காகம்
வாசல் விளக்குக் கம்பத்தின்
உச்சியில்.

விதிகளைக் கிழிப்பதில் வேலி தாண்டிக்
குதிக்கும் திகிலின்பம்;
குளிர் பெட்டிக் காய்கள் போல்
முலைகளில் பனி துளிர்க்கும்.
அலையும் மரங்கள் பெயர்தலை
விரும்பும்.
மறைவுகளில் தளும்பும் சிந்தை
இமையாப் பொழுதிலும் நெஞ்சில்
இறங்கும் மூர்க்கம்.
புரியப்புரிய விலகும் வெறுப்பின்
விடுதலை
மீறிய அபஸ்வர மயக்கம்
மடைகளின் விளிம்பில்
கவர்ச்சிகளிடம் தோற்ற பயம்.
இருந்தும் பரிபூரணமுற்றது
மகரந்த மஞ்சள்
ஒரு போதும் சீராகாதெனினும்
ஒட்டுண்ணியாகும் உயிர்
வெற்று வாழ்விடம்
சதுப்பு நடையாக